மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

அ.வ.எண்.06/2019
பி.வா.சா.1

பெயர் : காஜா முகைதீன் இஸ்மாயில் தேதி :18.09.2024
வயது : த/பெ :
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

1872 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின் படி 2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18 ம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை

நான் பிரமாண வாக்குமூலத்தில் 27.05.1993 தேதியிட்ட கிரைய ஆவணம் பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 27.05.1993 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணம் பதிவு செய்யும் சமயம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. பத்திரம் பதிந்தது எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். கேரளா பாரசாலையில் பதிவு செய்தார்கள். எந்த அடிப்படையில் வாதி ஆள்மாறாட்டம் செய்து பத்திரம் பதிவு செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் பாரசாலையில் பதிவு செய்துள்ளதாலும் பத்திரம் பதிவு செய்த சமயத்தில் பிரதிவாதிகளின் தகப்பனார் மதுரையில் இருந்ததாலும் ஆள்மாறாட்டம் செய்து பத்திரம் பதிவு செய்ததாக சொல்கிறேன். 27.05.1993 ல் பிரதிவாதிகளின் தகப்பனார் மதுரையில் இருந்ததாக ஆதாரம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அவர் காலமாகிவிட்டார். அவர் காலமாகி 10 ஆண்டுகள் இருக்கும். 27.05.1993 ல் பிரதிவாதிகளின் தகப்பனார் மதுரை கடையில் இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்ன வியாபாரம் செய்கிறேன் என்றால் திருப்பதியில் அகர் பத்தி, வாசனை திரவியம் வியாபாரம் செய்கிறேன். எந்த வருடத்திலிருந்து வியாபாரம் செய்கிறேன் என்றால் 10 ஆண்டுகளாக வியாபாரம் செய்கிறேன். முகைதீன் அத்தர் பேலஸ்

என்ற பெயரில் கடை வைத்து வியாபாரம் செய்கிறேன். பிரமாணவாக்குமூலத்தில் 1930 வருடத்தில் ஆவணம் பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் பற்றி தெரியாது. முகம்மது அப்துல் காதர் லெப்பை என்பவரை சிறுவயதில் 9 வயதில் பார்த்துள்ளேன். அவர் எப்போது இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை. நான் பிராது தபசில் சொத்தில் உள்ள வீட்டில் அகம்மது ஏ காதர் மன்சில் என்ற பெயர் உள்ளதாகவும் அதற்கு விளக்கமும் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். **என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ளது தான் அந்த வீடு என்றால் சரிதான். அந்த புகைப்படம் வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி புகைப்படத்தில் அகம்மது ஏ காதர் மன்சில் என்பதற்கு மேலே ஏ.சி.சி.எம் இல்லம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏ.சி.சி.எம் இல்லம் என்பது ஏ.சி.காதர் முகைதீன் என்றால் அது பிரதிவாதிகளின் தகப்பனாரின் தாத்தா பெயர் ஆகும். பிரதிவாதிகளின் தகப்பனார் காதர் முகைதீன் தாத்தா பெயர் அப்துல் காதர் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் அகம்மது என்பது அகம்மது மீராள் என்பதை குறிக்கும் என சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. அகம்மது மீராள் , சாகுல் அமீதின் பாட்டி பெயர் ஆகும். ஏ காதர் என்பது முகமது அப்துல் காதரை குறிக்கும் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரமாணவாக்குமூலத்தில் காதர் முகைதீனும், அவரது மக்களான பிரதிவாதிகளும் வாதியிடம் வாடகை ஒப்பந்தம் செய்தது கிடையாது என்றும் வாடகை தொகை வாதியிடம் செலுத்தியதும் கிடையாது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முகம்மது அப்துல் காதர் லெப்பையின் காலத்திற்கு பின்னர் அவரது வாரிசுகளான காதர் முகைதீன், முசா, ராபியா உம்மாள், முகைதீன் பாத்திமாள், ஜமால் பீவி ஆகியோர் காலம் வரையும் மேற்படியார்களின் காலத்திற்கு பின்னர் மேற்படியார்களின் வாரிசுகள் பிரதிவாதிகள் உட்பட பிராது தபசில் சொத்து வீட்டில் மூன்று தலைமுறையாக தொடர்ந்து 90 ஆண்டுகளாக எந்தவித வில்லங்கமுமின்றி கூட்டாக குடியிருந்து வந்ததாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தில்

கூட்டு அனுபவத்தில் இருப்பதாக சொல்லியுள்ளதற்கு ஏதாவது ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பிராது தபசில் வீட்டிற்கு பட்டா, மின்கட்டண ரசீது, வீட்டு வரி ரசீது, தண்ணீர் கட்டண ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் தற்போது வாதி பெயரில் மாற்றி வைத்துள்ளார். இந்த விபரங்கள் பிரதிவாதிகளுக்கு தெரியும் என்றால் தெரியாது. நான் திருப்பதியில் பத்தி வியாபாரம் செய்யவில்லை என்றாலும் எனக்கு தொழிலே பணம் வாங்கிகொண்டு சாட்சி சொல்வது என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒப்பம்/–
சா. முத்துலெட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவைகுண்டம்.